**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 3/2015**

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட்-12 ம் நாள் புதன்கிழமை**

| | |
|---|---|
| பெயர் | : வேல்முருகன் |
| சாட்சி | : DW1 |
| தந்தை பெயர் | : தவிட்டுகாரன் |
| நேரம் | : 3.05P.M to 4.20 PM |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்தில் மேல்பாதி 27 1/2 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 27 1/2 செண்டை தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து சர்வே எண்.88/9 ல் அமைந்துள்ளது. நான் அன்பழகன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேன். மேற்படி வில்லங்கத்தில் சொத்து அன்பழகன் பெயரில் இருந்தது. மேற்படி சொத்து அன்பழகனுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று தெரிந்து கொண்டேன் என்றால் வடமலை மகன் பெருமாள் மற்றும் இராமச்சந்திரன் என்பவரிடமிருந்து அன்பழகன் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பெருமாளிடமிருந்து அன்பழகன் கிரையம் பெற்றதற்கு முன் ஆவணம் எதுவும் நான் பார்வையிட்டேனா என்றாலும் அதற்கு உண்டான ஆவணத்தை என்னிடம் கொடுத்தார்களா என்றால் பெருமாளிடமிருந்து அன்பழகன் கிரையம் பெற்ற ஆவணத்தை கொடுத்தார்.

2. பெருமாளுக்கு எப்படி சொத்து பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பெருமாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து ஆகும். என்னிடம் பெருமாளிடமிருந்து அன்பழகன் பெற்ற கிரைய பத்திரத்தை தான் கொடுத்தார். பெருமாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதற்கு உண்டான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் வடமலை மற்றும் சின்னதம்பி ஆகியோர் வாய்மொழியாக பிரித்து கொண்டனர். வடமலையின் தகப்பனார் பெயர் கருப்பு கவுண்டர் ஆகும். கருப்பு கவுண்டருக்கு 4 பெண் குழந்தைகளும் 3 ஆண் மகன்களும் உள்ளார்கள். ஆண் மகன்களான வடமலை, சின்னதம்பி, மற்றும் முனியன். கருப்பு கவுண்டருக்கு ஏழு குழந்தைகள் இருக்கும்போது வடமலை மற்றும் சின்னதம்பி மட்டும் பாகம்

பிரித்து கொண்ட நிலையில் மற்றவர்களுக்கு பாகத்தில் என்ன பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு விவரம் தெரியுமா என்றால் எனது சொத்தை மட்டும் தான் எனக்கு தெரியும்.

3. கருப்பு கவுண்டருக்கு மொத்த சொத்து எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள கிணற்றில் நான்கில் இரண்டு பெண் மகள்கள் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள் என்றால் சொத்தில் கிணறே இல்லை. 27 1/2 செண்டில் தன்னுடைய மகள்கள் இறந்த பிறகு இரண்டு கற்களை வைத்து கண்ணி பூஜையை கருப்பு கவுண்டர் அவர் உயிருடன் இருக்கும் காலம் வரை பூஜை செய்து வந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் இரு பெண் குழந்தைகள் இறந்ததால் அந்த இடத்தில் உழவு செய்வதில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 6 ல் பத்தி 9 ல் வடமலை கவுண்டரின் குமாரர்கள் பெருமாள்கவுண்டர், வீரப்பன், சுப்பராயன், வீராசாமி மற்றும் பெண் குழந்தைகள் ஆகியோர்கள் கூட்டாக ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்று கூறிய நிலையில் வடமலைக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மொத்தம் ஏழு பேர் அதில் ஆண் மக்கள் 4 பேர் பெண் மக்கள் 3 பேரா அல்லது 4 பேரா என்று ஞாபகம் இல்லை. வடமலையின் மனைவி பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. வடமலைக்கு வீராசாமி என்ற மகன் மட்டும் தான் என்றாலும் மற்ற குழந்தைகள் வடமலையின் குழந்தைகள் அல்ல என்றால் சரியல்ல. மற்ற குழந்தைகளும் வடமலையின் குழந்தைகள் தான். வடமலைக்கு இரண்டு மனைவிகள். நான் சொல்வது போல் வடமலைக்கு கண்ணம்மாள் என்பவர் மட்டும் தான் மனைவி என்றாலும் வடமலைக்கும், கண்ணம்மாளுக்கும் பிறந்த ஒரே மகன் வீராசாமி என்றாலும் சரியல்ல.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 8 ல் பத்தி 14 ல் கடந்த 05.02.2007 ல் வாதி வாதியின் தகப்பனார் சின்னத்தம்பி மற்றும் வாதியின் குடும்பத்தார் ஆகியோர்கள் கூட்டு சதி செய்து எனக்கு பாத்தியமான சர்வே எண்.88/9 ல் மேல்புறம் ஏக்கர் 0.27 /12 செண்டை ஏமாற்றி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 05.02.2007 ல் பாகம் பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்று குறிப்பிட்டு உள்ளேன் என்றாலும் வழக்கு சொத்தை நான் எப்போது கிரையம்

பெற்றேன் என்றால் 12.09.2012 அன்று கிரையம் பெற்றேன். நான் 2012 ல் தான் அன்பழகனிடமிருந்து கிரையம் பெற்ற நிலையில் 2007 ல் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் ஏமாற்றி வாதி பாகம் பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டார் என்று அவதூராக கூறுகிறேன் என்றால் பெருமாள் என்பவர் சொத்தை 17 வருடத்திற்கு முன்பாகவே வாய்மொழியாக பிரித்து கொண்டானர் என்று கூறினார். 1982 ல் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அ பதிவேடு அனைத்திலும் சின்னத்தம்பி என்பவர் பெயர் தான் உள்ளது என்றாலும் மேற்சொன்ன பட்டா, சிட்டா, அ பதிவேடு ஆவணங்களும் ஏமாற்றி பெறப்பட்டது என்றால் இரண்டு பெயரில் ஒருவர் மட்டும் பாகம் பெற்று சின்னத்தம்பி பெயர் மட்டும் வருவதற்கு வாய்ப்பில்லை.

6. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 7 ல் பத்தி 11 ல் மேற்படி பெருமாள் மற்றும் பெருமாளின் மகன்கள் சுமார் 17 வருடத்திற்கு முன்பு அவர்களுக்கு பாத்தியமான அனைத்து சொத்துக்களையும் வாய் மொழி பாகமாக பிரித்து கொண்டார்கள் என்று கூறிய நிலையில் அதற்கு உண்டான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெருமாளின் அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கு ஏதேனும் வருவாய் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆவணம் இல்லை. சர்வே கல் மட்டும் தான் நடப்பட்டுள்ளது. சர்வே கல் சின்னத்தம்பி வைத்தாரா என்றால் சரியல்ல. நான் கிரையம் பெருவதற்கு முன்பு அன்பழகன் பெருமாளிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறிய நிலையில் அதற்கு உண்டான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில் பெருமாளுக்கே சொத்தில் உரிமை இல்லாத போது அன்பழகன் எவ்வாறு எனக்கு விற்பனை செய்தார் என்றால் வடமலை மற்றும் சின்னத்தம்பி பாகம் பிரித்து கொண்டதில் பெருமாளுக்கு பாத்தியமானது அதனடிப்படையில் பெருமாளிடமிருந்து அன்பழகனுக்கும் அதன்பிறகு எனக்கும் பாத்தியப்பட்டது.

7. பெருமாளுக்கு சொத்தில் பாத்தியமில்லாத போது அன்பழகனுக்கு விற்பனை செய்த கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முறையான உரிமையாளரிடமிருந்து சொத்தை அன்பழகன் கிரையம் பெறாததால் அன்பழகனிடமிருந்து நான் கிரையம் பெற்ற சொத்து செல்லாது என்றால் 2009 ல் வில்லங்கம் பார்த்து தான் அன்பழகன் கிரையம் பெற்றார். அதன்பின்பு 2012 ல் நான் வில்லங்கம் பார்த்து தான் அன்பழகனிடமிருந்து கிரையம் பெற்றேன். அதில்

அன்பழகனின் பெயர் மட்டும் தான் இருந்தது. நான் வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையம் பெற்ற பிறகு மின்இணைப்பு பெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் வாங்கிய கிரையமே செல்லத்தக்கதல்ல என்ற நிலையில் என்னுடைய இடத்திற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு துண்டிப்பு செய்யவேண்டியது என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா உள்ளது.

8. நான் பெற்ற கிரையமே செல்லதக்கதல்ல என்ற நிலையில் அதனடிப்படையில் பெறப்பட்ட பட்டா எண்.1682 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தை வைத்து சென்ரல் வங்கியில் 19.12.2012 ல் கடன் பெற்றதனாலேயே சொத்தில் எனக்கு உரிமை வந்துவிடாது என்றால் சரியல்ல. என்னுடைய பிராமாண பத்திரத்தில் 19 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள சிட்டா, அ பதிவேடு, வீட்டு வரி ரசீதுகள் அனைத்துமே இந்த வழக்கிற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. சொத்தில் அரசு வீடு, மாட்டுக்கொட்டகை மற்றும் கோழி பண்ணை , இரண்டு மின் இணைப்புகள் ஆகியவை உள்ளது. வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் அன்பழகனிடம் நேரில் சென்று வழக்கு சம்மந்தமாகவும் வழக்கு சொத்து பற்றியும் நான் கேட்டேனா என்றால் நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தவுடன் பார்த்து கொள்ளலாம் என்று அன்பழகன் கூறினார். அவர் மீது எந்த ஒரு வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை. அன்பழகனுக்கு தற்போது விபத்து ஏற்பட்டது இடது காலில் அறுவை சிகிச்சை செய்திருக்கிறார். நான் அன்பழகனிடம் கேட்டபோது முனியன் நிலமும் பெருமாள் நிலமும் இருப்பதாக கூறினார். அழைப்பானை வரும் போது பார்த்து கொள்ளலாம் என்று சொன்னார். பெருமாளிடமும் நான் வழக்கை பற்றி கேட்டேன்.

9. நான் உரிமையில்லாத அன்பழகனிடமிருந்து சொத்தை கிரையம் பெற்றதால் கிரையம் பெற்றதன் அடிப்டையில் நஷ்டம் ஏற்பட்டதால் அன்பழகனிடம் தான் நஷ்டயீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றாலும் இந்த வழக்கை வாதி மீதும் அவரின் சொத்தின் மீதும் உரிமை கோர முடியாது என்றால் முதலில் அன்பழகன் சொத்தை 4 வருடம் அனுபவித்து வந்தார். அதன்பிறகு தான் நான் அன்பழகனிடம் கிரையம் பெற்றேன். அன்பழகன் சொத்தை அனுபவிக்கும் போது வாதி தொந்தரவு செய்யவில்லை. நான் சொத்தை வாங்கிய பிறகு தான் தொந்தரவு செய்து வருகிறார். அன்பழகன் பெருமாளிடமிருந்து 2009 ல் கிரையம் பெற்ற

நிலையில் அன்பழகன் 2009 லிருந்து வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும் அன்பழகன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் வெறும் பெயரளவில் மட்டும் தான் ஏற்படுத்தப்பட்டது. அது நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் அன்பழகன் பயிர் மற்றும் மணல் வியாபாரம் செய்தார். வழக்கு சொத்து தரிசு நிலம் ஆகும். வழக்கு சொத்து ஆதியில் கருப்பு என்பவர்க்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதன் பின்னிட்டு வாதியின் தந்தை சின்னத்தம்பிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் முனியனுக்கும் வடமலைக்கும் வேறு சொத்து ஒதுக்கப்பட்டது என்றாலும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டார்கள் என்றாலும் சின்னத்தம்பிக்கு பாத்தியப்பட்ட சொத்தை மட்டும் அவருடைய மகனான இவ்வழக்கின் வாதி 2007ல் ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரத்தின்படி B அட்டவணை சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

10. 55 செண்ட் என்பது இன்றுவரை சின்னத்தம்பி பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் அனைத்திலும் உள்ளது என்றாலும் எனது கிரைய பத்திரத்தின் மூலமாக தான் 27 1/2 செண்ட் உடைந்துள்ளது என்றாலும் அதற்கு முன்னதாக ஆதியிலிருந்து 55 செண்டாகவே சின்னத்தம்பி பெயரில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பிறகு எனது பெயரில் பட்டா உள்ளது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் ஆணையர் சரியான அறிக்கை தான் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வாதி தாக்கல் செய்துள்ள சொத்து வாதிக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் எந்த விதத்திலும் வாதியை இடையூறு செய்ய கூடாது என்று கேட்ட பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தது என்றாலும் வாதி இந்த வழக்கிற்காக செலவு செய்த தொகையுடன் தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.**